DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 614/2021 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | நடேசன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 59 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day August 2024.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2021–ம் ஆண்டு இந்நீதிமன்ற காவலராக பணியாற்றி வந்தேன். பேரளம் காவல் நிலையத்தில் குற்ற எண்.127/2012 சட்டப்பிரிவுகள் 294(பி), 506(2) இதச சி.சி எண்.178/2018 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ராஜீவ்காந்தி த/பெ. ஜெயராஜ் வடக்குவெளி, கம்பூர், திருப்பாம்புரம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் பிணை மனுதாக்கல் செய்து பிணை மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் தகுந்த பிணையதாரர்களுடன் முன்னிலையாகி நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். மேற்படி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை நிபந்தனை உத்தரவினை எதிரியானவர் பின்பற்றாமல் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் தலைமறைவாகிவிட்டதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் தனி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னிடத்தில் காண்பிக்கப்படும் தனி அறிக்கை என்னால் தாக்கல் செய்யப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பேரில் எதிரி மீது உதவி ஆய்வாளர் பாபுதாஸ் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.